


முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (14.10.2025) சென்னை, ஜவஹர்லால் நேரு உள்விளையாட்டு அரங்கத்தில் நடைபெற்ற முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகள் 2025 நிறைவு விழாவில், தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளையிலிருந்து நிதியுதவி வழங்கும் திட்டத்தின் கீழ், பன்னாட்டு அளவிலான போட்டிகளில் பதக்கம் வெல்லும் திறன் கொண்ட விளையாட்டு வீரர்களுக்கு நிதியுதவி வழங்கிடும் வகையில் வீரர்கள் மற்றும் வீராங்கனைகளுக்கு நிதியுதவிக்கான காசோலைகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர் பி.கே. சேகர் பாபு உள்ளிட்ட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (14.10.2025) சென்னை, ஜவஹர்லால் நேரு உள்விளையாட்டு அரங்கத்தில் நடைபெற்ற முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகள் 2025 நிறைவு விழாவில், 36 தங்கம், 22 வெள்ளி மற்றும் 30 வெண்கலம் என 88 பதக்கங்களுடன் இரண்டாம் இடத்தை பெற்ற செங்கல்பட்டு மாவட்டத்திற்கான கோப்பையை செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி தி. சினேகா, மாவட்ட விளையாட்டு அலுவலர் மற்றும் விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் ஆகியோரிடம் வழங்கி வாழ்த்தினார். இந்நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர் பி.கே. சேகர் பாபு உள்ளிட்ட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (14.10.2025) சென்னை, ஜவஹர்லால் நேரு உள்விளையாட்டு அரங்கத்தில் நடைபெற்ற முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகள் 2025 நிறைவு விழாவில், 109 தங்கம், 90 வெள்ளி மற்றும் 82 வெண்கலம் என மொத்தம் 281 பதக்கங்களுடன் முதலிடத்தை பெற்ற சென்னை மாவட்டத்திற்கான கோப்பையை பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ. குமரகுருபரன், சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. ரஷ்மி சித்தார்த் ஜகடே மாவட்ட விளையாட்டு அலுவலர் மற்றும் விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்களைகள் ஆகியோரிடம் வழங்கி வாழ்த்தினார். இந்நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர் பி.கே. சேகர் பாபு உள்ளிட்ட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (14.10.2025) சென்னை, ஜவஹர்லால் நேரு உள்விளையாட்டு அரங்கத்தில் நடைபெற்ற முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகள் 2025 நிறைவு விழாவில், தமிழ்நாட்டில் உள்ள அங்கீகரிக்கப்பட்ட விளையாட்டு சங்கங்கள் மற்றும் சம்மேளனங்கள் சம்பேள்ளங்கள் நடத்தும் மாநில மற்றும் தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்கும் 25,000 விளையாட்டு வீரர் வீராங்கனைகளுக்கு போட்டிகளின் போது ஏற்படும் விபத்துகளினால் உண்டாகும் உடற்காபங்கள் மற்றும் உயிரிழப்பினை ஈடுசெய்து உதவிடும் வகையில் விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகளுக்கு மருத்துவக் காப்பீட்டு ஆணைகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர் பி.கே. சேகர் பாபு உள்ளிட்ட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (14.10.2025) சென்னை, ஜவஹர்லால் நேரு உள்விளையாட்டு அரங்கத்தில் நடைபெற்ற முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகள் 2025 நிறைவு விழாவில் கலை நிகழ்ச்சிகளை பார்வையிட்டார். இந்நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர் பி.கே. சேகர் பாபு உள்ளிட்ட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## சென்னை, நேரு உள்விளையாட்டு அரங்கில் –

# ‘முதலமைச்சர் கோப்பை’ விளையாட்டுப் போட்டி பரிசுத் தொகை வழங்கும் விழா!

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வரவேற்புரை!

**சென்னை, அக். 16 -**

**சென்னை, நேரு உள்விளையாட்டு அரங்கில் முதலமைச்சர் கோப்பைப் போட்டியில் வெற்றிபெற்ற வீரர் வீராங்கனைகளுக்கு பரிசுத்தொகை வழங்கும் விழாவில், துணை முதலமைச்சரும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்டு அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.**

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய வரவேற்புரை வருமாறு:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் நடைபெறுகிற முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகள் - 2025 பரிசளிப்பு விழாவில் உங்களை எல்லாம் வரவேற்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன்.

**கலைஞரின் இலட்சியம்**

தமிழ்நாடு, விளையாட்டுத் துறையில் நம்பர் - 1 இடத்தை அடைய வேண்டும் என்றுதான், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது விளையாட்டுத்துறைக்கு என்று ஒரு தனி அமைச்சகத்தை முதன்முறையாக அமைத்தார். கலைஞரின் இலட்சியத்தை நிறைவேற்றுகிற வகையில், நம் முதலமைச்சர் தலைமையிலான அரசு, விளையாட்டிலும் நம்பர் -1 என்ற இடத்தை அடைந்து வருகிறது. அதற்கு ஒரு சிறந்த உதாரணம்தான் இங்கு நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகள் - 2025. முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகள், இன்றைக்கு தமிழ்நாட்டில் ஒரு மாபெரும் விளையாட்டுப் புரட்சியை உண்டாக்கி, மாபெரும் இயக்கமாக மாற்றி வருகின்றது.

நம் முதலமைச்சர் அவர்கள் போட்டியைச் சிறப்பாக நடத்த வேண்டும் என்று, 84 கோடி ரூபாயை ஒதுக்கிக் கொடுத்தார்கள். பரிசுத் தொகையாக ரூபாய் 34 கோடியை, நம் முதலமைச்சர் அவர்கள் ஒதுக்கிக் கொடுத்துள்ளார்கள். அதற்கு விளையாட்டு வீரர்களின் சார்பாகவும், விளையாட்டுத் துறையின் சார்பாகவும் முதலமைச்சர் அவர்களுக்கு எங்களின் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**16 லட்சம் வீரர் வீராங்கனைகள்**

2023-ஆம் ஆண்டு இதே முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்பதற்காக, தமிழ்நாட்டில் இருந்து 4 லட்சம் விளையாட்டு வீரர்கள் கலந்துகொண்டார்கள். 2025-ஆம் ஆண்டு சுமார் 16 லட்சம் இளைஞர்கள் நம் முதலமைச்சர் கோப்பை




விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்டுள்ளார்கள். இதிலிருந்தே இந்த போட்டிகளுக்கான வரவேற்பையும், எதிர்பார்ப்பையும் நீங்கள் புரிந்து கொள்ளலாம்.

முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்படுவதற்கான நோக்கமே தமிழ்நாடு முழுவதும் வெளியில் தெரியாமல் இருக்கின்ற விளையாட்டுத் திறமையாளர்களை, வெளியே கொண்டு வரவேண்டும் என்பதுதான் எங்களின் ஒரே நோக்கம். தமிழ்நாட்டில் உள்ள திறமையான விளையாட்டு வீரர்களை, தேசிய மற்றும் சர்வதேசப் போட்டிகளுக்கு அனுப்புகின்ற ஒரு ஏவுதளம்தான் முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகள்- 2025.

இந்த மேடையில் உங்கள் முன் இரண்டு முக்கியமான வீரர்கள் அமர்ந்திருக்கிறார்கள்.

திருநெல்வேலியைச் சேர்ந்த தம்பி பெனடிக்சன் ரோகித் அவர்கள். இன்றைக்கு சர்வதேச அளவில் நீச்சல் போட்டிகளில் வெற்றியைக் குவித்து வருகிறார். இப்போதுகூட மென்ஸ் 100 மீட்டர் பட்டர்ஃப்ளை நீச்சல் பிரிவில் 52.5 நொடிகளில் நீந்தி தேசிய அளவில் சாதனை படைத்துள்ளார் தம்பி ரோகித் அவர்கள். அடுத்து வருகின்ற ஒலிம்பிக் போட்டிகளில் பங்கேற்பதற்காக மிக கடினமாக பயிற்சி எடுத்து வரும் ரோகித் அவர்களுக்கு நாம் அனைவரும் நம் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்வோம்.

**பெருமையான தருணம்**

அரியலூர் மாவட்டம், உடையார்பாளையத்தைச் சேர்ந்த தங்கை சர்வானிகா இங்கு நம்முடன் உட்கார்ந்து இருக்கிறார். செஸ் போட்டியில், இன்றைக்கு இந்தியாவே பெருமைப்படுகிற அளவுக்கு வேகமாக வளர்ந்து வருகிற வீராங்கனைதான் சர்வானிகா அவர்கள். அவருக்கு இன்னும் 10 வயதுகூட ஆகவில்லை. ஆனால், கிட்டத்தட்ட 10 தேசிய மற்றும் சர்வதேச பதக்கங்களை வென்று காட்டியுள்ளார்கள். இது சர்வானிகாவுக்கு மட்டும் தனிப்பட்ட பெருமை என்பதைவிட, இது ஒட்டுமொத்த இந்தியாவுக்கும், தமிழ்நாட்டுக்கும் பெருமையான தருணம் என்று சொல்லலாம்.

ரோகித், சர்வானிகா போன்ற இன்னும் பலநூறு வீரர்கள், உங்களில் இருந்து வருவார்கள் என்ற நம்பிக்கை நம் முதலமைச்சர் அவர்களுக்கு இருக்கிறது. அதற்காகத்தான் தமிழ்நாடு சாம்பியன்ஸ் பவுண்டேஷன், உயரிய ஊக்கத்தொகை அளிப்பது என அனைத்து வகையிலும் நம் அரசு உங்களுக்குத் துணை நிற்கிறது. இவற்றைப் பயன்படுத்திக் கொண்டு, உங்களை, உங்கள் திறமைகளை நீங்கள் வளர்த்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பயிற்சியும், மன உறுதியும் இருந்தால், நீங்கள் சாதித்துக் காட்டுவீர்கள் என்ற நம்பிக்கை இந்த அரசுக்கு இருக்கிறது. உங்களுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் செய்ய நம் முதலமைச்சர் அவர்கள் தயாராக இருக்கிறார். இந்த விழாவுக்குத் தலைமையேற்றுள்ள திராவிட மாடல் நாயகர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை விழாவிற்கு வருக, வருக என வரவேற்கிறேன்.

**வரவேற்பு**

செஸ் வீராங்கனை சகோதரி சர்வானிகா அவர்களையும், நீச்சல் வீரர் பெனடிக்சன் ரோகித் அவர்களையும், மாண்புமிகு அமைச்சர் அண்ணன் சேகர்பாபு உள்ளிட்ட அனைத்து அமைச்சர்களையும், சென்னை மாநகராட்சி மேயர் பிரியா ராஜன், துணை மேயர் மகேஷ்குமார் உள்ளிட்ட அனைத்து உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளையும், நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன் உள்ளிட்ட அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களையும், சட்டமன்ற உறுப்பினர் பரந்தாமன் உள்ளிட்ட அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களையும் வரவேற்கின்றேன்.

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறையின் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் அதுல்யா மிஸ்ரா ஐ.ஏ.எஸ்., அவர்களையும், பெருநகர சென்னை மாநகராட்சியின் ஆணையர் குமரகுருபரன் ஐ.ஏ.எஸ்., அவர்களையும், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் செயலர் மேகநாத் ரெட்டி ஐ.ஏ.எஸ்., அவர்களையும், முதல் மூன்று இடங்களை வென்றுள்ள மாவட்டங்களின் ஆட்சித் தலைவர்கள் ரோகிணி ஐ.ஏ.எஸ்., ரஷ்மி ஐ.ஏ.எஸ்., சினேகா ஐ.ஏ.எஸ்., பவன்குமார் ஐ.ஏ.எஸ்., உள்ளிட்ட அனைத்து அரசு அதிகாரிகளையும், காவல்துறை அதிகாரிகளையும், விளையாட்டுத் துறையில் பல்வேறு சாதனைகளைப் படைத்து வருகிற வீரர்கள், வீராங்கனைகள் உங்கள் அத்தனை பேரையும் வருக, வருக என வரவேற்கிறேன்.

விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் நிர்வாகக் குழுவில் இடம்பெற்றுள்ள அனைவரையும், இந்த நிகழ்ச்சியை இவ்வளவு சிறப்பாக ஏற்பாடு செய்துள்ள உங்கள் அத்தனை பேரையும் வருக, வருக என வரவேற்கிறேன்.

**பெருமைவாய்ந்த நிகழ்ச்சி**

தமிழ்நாடு முழுவதும் இருந்து முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகளை மிகச் சிறப்பாக நடத்திய அனைத்து அதிகாரிகளையும், நடுவர்களையும், தன்னார்வலர்களையும் வருக, வருக என வரவேற்கிறேன். தமிழ்நாடு சாம்பியன் பவுண்டேஷன் மூலம் பயன்பெறுகிற அனைவரையும் வருக, வருக என வரவேற்கிறேன்.

இந்தப் பெருமைவாய்ந்த நிகழ்ச்சிக்கு வருகை தந்துள்ள பல்வேறு அமைப்புகளைச் சேர்ந்த பிரதிநிதிகளை வருக, வருக என வரவேற்கிறேன்.

எனது மனதுக்கு என்றும் நெருக்கமான நம் எஸ்.டி.ஏ.டி விடுதி மாணவர்கள், மாணவிகள் அத்தனை பேரையும் வருக, வருக என வரவேற்கிறேன். முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகளுக்கான விழிப்பு உணர்வை ஏற்படுத்த கிட்டத்தட்ட 1,300 கிலோ மீட்டர் தூரம் மோட்டார் சைக்கிள் பேரணி நடத்திய தங்கை நிவேதா ஜெசிக்கா உள்ளிட்ட மெட்ராஸ் மோட்டார்ஸ் கிளப்பைச் சேர்ந்த சகோதரிகள் அனைவரையும் வருக, வருக என வரவேற்கிறேன்.

இங்கு கலைநிகழ்ச்சிகளை அரங்கேற்ற உள்ள கலைஞர்களுக்கு எனது பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன். வந்திருக்கின்ற கழக நிர்வாகிகளையும், பத்திரிகை நண்பர்களையும் வரவேற்று மகிழ்கிறேன்.

முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகள் தொடர்ந்து வெல்லட்டும்.

களம் நமதே.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வரவேற்புரையாற்றினார்.